# விபஸ்ஸனா செய்தி மடல்

விபஸ்ஸனா; ஸயாஜி ஊ பா கின் வழிமரபில் திரு.சத்திய நாராயண கோயங்கா அவர்களால் போதிக்கபடும் தியானமுறை

தொகுப்பு 31, எண் 11, நவம்பர் 19, 2021.

விபாசனா ஆராய்ச்சி நிறுவனத்தின் மாதாந்திர பிரசுரம்.

வலை தளம் www.vridhamma.org பன்னாட்டு வலை தளம் www.dhamma.org

விபாசனா செய்திமடலின் சிறப்பு ஆன்-லைன் பதிப்பு.


---

## தம்மா பொன்மொழிகள்

**பூஜகோ லபதே பூஜம், வந்தகோ படிவன் தனம்**

**யஸோ கி த்திஞ்ச ப்ப்போதி, யோ மித்தானம் ந துப்பதி**

மற்றவர்களை மதித்து மரியாதை கொடுப்பவர் அனைவராலும் மதிக்கப்படுகிறார். பிறரைக் கௌரவிப்பவர் அனைவராலும் கௌரவிக்கப்படுகிறார். நண்பர்களுக்கு துரோகம் செய்யாதவர் புகழையும் கீர்த்தியையும் அடைகிறார்.

---

# ஸ்ரீ எஸ் என் கோயங்காவின்

# சுயசரிதை - பகுதிகள்

இந்த செய்திமடலில் மதிப்புக்குரிய கோயங்காஜியின் சுயசரிதை பகுதிகள் அவ்வப்போது வெளியிடப்பட்டு வருகிறது. தம்மத்தை நிலைநாட்டுவதில் அவர் மேற்கொண்ட போராட்டங்கள் மற்றும் வெற்றிகள் மேலும் அவரது ஆசிரியர் சயாகி உ பா கின் உடனான அவரது ஆழமான தொடர்பை நமக்குக் இவை காட்டுகின்றன. – (ஆசிரியர்)



## செயல் முறை சார்ந்த தம்மம்

தம்மம் வாழ்க்கையின் ஒரு அங்கமாக மாறினால்தான் அது தம்மம் என கருதப்படும். அது நமது அன்றாட நடவடிக்கைகள் மற்றும் நமது நடத்தையின் ஒரு பகுதியாக மாற வேண்டும். அது இயந்திரமயமாகி, வெறும் சடங்காக மாறினால், அது பலனைத் தராது. வசந்த காலத்திலும் குளிர்காலத்திலும் மற்றும் ஏற்றத்தாழ்வுடைய வாழ்க்கையின் ஓட்டத்துடன்

சமநிலை பராமரிக்கப்பட வேண்டும். மதிப்புக்குரிய சயாகி உ பா கின் இதற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்தார். அவரது இந்த போதனை என் மனதில் சக்தி வாய்ந்த தாக்கத்தை ஏற்படுத்தியது.

கண் இமைக்கும் நேரத்தில், எனது தொழில்கள் அனைத்தும் தேசியமயமாக்கப்பட்டு, அரசாங்கத்தின் கைகளுக்குச் சென்றபோது, ஒரு சமநிலையான மனநிலையைப் பேணுவது, ஒரு சமநிலை மற்றும் அமைதியான மனம் விபாசனாவால் மட்டுமே சாத்தியமானது. இதைக் கண்டு என் ஆசிரியர் மிகுந்த மகிழ்ச்சி அடைந்தார்.

ஒரு நாள் அவர் கேட்டார், "உங்கள் தினசரி தியானத்திற்குப் பிறகு, உங்கள் உள்ளார்ந்த நலன்களைப் பகிர்ந்து கொள்கிறீர்களா, மெட்டா பயிற்சி செய்வதில் சிறிது நேரம் செலவிடுகிறீர்களா?" என கேட்டார். ஆம் என்ற உறுதியான பதிலின் பின்னர் அவர் மேலும், "உங்கள் உள்ளார்ந்த நலன்களை நன்றிகளை யாருடன் பகிர்ந்து கொள்கிறீர்கள்?" என்று கேட்டார்.

"பெரியவர்கள், மற்றும் எனக்கு நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ தம்மத்தில் வளர உதவியவர்கள் - எனது முழு வணிகத்தையும் தேசியமயமாக்கிய அரசாங்க அதிகாரிகளும் அமைச்சர்களும் கூட இதில் அடங்குவர்" என நான் சொன்னேன். இதற்குப் பிறகு எனது நன்றிகளை எல்லா உயிர்களுடனும் பகிர்ந்து கொள்கிறேன்" என்றேன். இது அவருக்கும் மகிழ்ச்சியை அளித்தது. மேலும், நான் தேசியமயமாக்கலுக்குக் காரணமான அரசாங்கத்தின் மீதோ அல்லது அதிகாரிகளின் மீதோ எந்தவித எதிர்மறையான எண்ணத்தையும் கொண்டிருக்கவில்லை என்று அவரிடம் தெரிவித்தேன். இந்த அமைச்சரவையில் எனது நண்பர்களும் உள்ளனர். அரசாங்கத்தின் இந்த நடவடிக்கை எந்தவொரு குறிப்பிட்ட வணிக சமூகத்திற்கும் தீங்கிழைக்கும் நோக்கத்துடன் எடுக்கப்படவில்லை என்றும், ஒட்டுமொத்த தேசத்திற்கும் நன்மை பயக்கும் நோக்கத்துடன் எடுக்கப்பட்டதாக அவர்கள் தெரிவித்தனர்.

அவர்கள் மனதில் விரோதம் இல்லாதபோது, நான்ஏன் விரோத எண்ணத்தை மனதில் மேற்க்கொள்ள வேண்டும்?.

உண்மைஅறிந்த பின்னர் நல்லெண்ணம் மட்டுமே என் மனதில் அவர்களை நோக்கி உதித்தது. அவர்களுக்கு நான் நன்றியுள்ளவனாக இருக்கிறேன்.

தொழில்களை நடத்துகிற எல்லா பொறுப்புகளிலில் இருந்தும் என்னை விடுவித்ததுள்ளனர்.

தொழிலுக்கு அடிமையான என்னை அச்சிக்கலிருந்து வெளிக்கொணர்ந்தனர். பரியாத்தி மற்றும் படிபத்தி (கோட்பாடு மற்றும் நடைமுறை) தம்மம் அர்ப்பணிக்க இப்போது போதுமான நேரம் கிடைத்து இருக்கிறது. இல்லாவிட்டால் அது சாத்தியமற்றதாக இருந்திருக்கும்.

குருதேவ், இதைக் கேட்டு சாது! சாது! சாது! என்றார். மற்றும் என்னை ஊக்கப்படுத்தினார். என்னிடம் அது போலவே மெட்டாவைத் தொடரவும் என வாழ்த்தினார். மேலும் தொடர்ந்து மெட்டா கொடுத்து வருகிறேன். தொடர்ந்து செய்வேன். இதனால் நான் உண்மையிலேயே மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறேன்.

---

# அடிப்படையே தவறாக இருந்தால்

2500 ஆண்டுகளுக்குப் பிறகு ததாகதாவின் மஹாபரிநிப்பானா - விபாசனா மீண்டும் அதன் பிறந்த மண்ணில் எழும் - என்று எனது ஆசிரியை சயாகி உ பா கின் முழு நம்பிக்கையுடன் இருந்தார். மற்றும் அங்கிருந்து உலகெங்கிலும் பரவி பலருக்கும் பெரும் நன்மைகளை அளிக்கும் என்றும் கணித்தார்.

அவர் அடிக்கடி கூறுவார், 'விபாசனா பர்மாவின் எல்லைகள் தாண்டிச் செல்லும் நேரம் இப்போது வந்துவிட்டது. மற்றும் அது எல்லா இடங்களிலும் பரவிச்செல்லும்.'

ஒரு தம்ம தூதுவராக இந்தியாவிற்கு வர வேண்டும் என்பது அவரது வலுவான தம்ம விருப்பம். மற்றும் தானே சென்று முகாம்களை நடத்தவும் குறிப்பிடத்தக்க, புனிதமான மற்றும் மகத்தான தம்ம பணியில் பங்கேற்கவும் விரும்பினார்.



அதனால் துன்பங்கள் பெருகும் ஆதரவற்ற மக்களுக்கு நன்மையான வழியைக் காட்ட விபாசனா உதித்த அந்த தேசத்தில் மீண்டும் விபாசனா நிறுவி அவர்களுக்கு, உதவ விரும்பினார்.

“இந்த விலைமதிப்பற்ற தம்ம நகையை இந்தியா இழந்துவிட்டது. அதற்கு தற்பொழுது அது அவசியம் தேவை. பர்மா இந்தியாவிற்கு பட்ட பெரிய கடனான தம்ம நகையை திருப்பி செலுத்த வேண்டிய நேரம் வந்துவிட்டது.

பல முன் பிறவிகளில் சேகரிக்கபட்ட பொங்கி ததும்புகின்ற ப்ராமிகள் நிரம்பிய பலர் அந்த நிலத்தில் தோன்றியுள்ளனர்.

அப்படிப்பட்டவர்கள் இந்த தம்மம், விபாசனாவின் இந்த நகையை எளிதாக மற்றும் மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொள்வார்கள்” என அவர் அடிக்கடி திரும்பத் திரும்பச் சொல்வார்.

சயாகி உ பா கின் இந்தப் புனிதத் பணிக்காக அவரால் இந்தியாவுக்குச் செல்ல முடியவில்லை. அந்தக் காலத்தில் பர்மிய குடிமகன் பயணம் செய்ய பாஸ்போர்ட் பெறுவது மிகவும் கடினமாக இருந்தது.

இந்த நேரத்தில், இந்தியாவில் மெட்ராஸில் உள்ள மகாபோதி சொசைட்டியின் தலைமை பிக்கு, குருதேவை கூட்டாளிகள் சிலருடன் இந்தியாவிற்கு வந்து விபாசனா முகாமை ஏற்பாடு செய்யுமாறு கேட்டு அழைப்புக் கடிதம் அனுப்பினார்.

அவரது நீண்ட நாள் ஆசை நிறைவேறும் நேரம் இது என்று நினைத்து மிகவும் மகிழ்ச்சியாக இருந்தார். தம்ம சேவைக்காக பயணிக்க கோரிக்கையுடன் பாஸ்போர்ட்டுக்கு விண்ணப்பித்தார்.

இதில் சம்பந்தப்பட்ட அதிகாரி, சயாகியை ஆழமாக மதித்தார் .

பர்மிய விதிகளின்படி, பர்மாவை விட்டு வெளியேற விரும்புவோருக்கு மட்டுமே பாஸ்போர்ட் வழங்கப்படும் அல்லது வேலைக்காக வெளிநாடுகளுக்கு பயணம் செய்பவர்களுக்கு பாஸ்போர்ட் கொடுக்க முடியும்.

இப்படிப்பட்ட நிலையில் சயாகிக்கு எப்படி பாஸ்போர்ட் வழங்க இயலும்?. உதவி செய்ய இயலாதவராக இருந்தார். அதனால் அவர் ஒரு மூத்த அதிகாரியை ஒரு செய்தியுடன் சயாகியிடம் அனுப்பினார். அந்த அதிகாரி சயாகியின் மாணவராக இருந்தவர்.

வெளிநாட்டில் அவரது மாணவர் ஒருவரிடமிருந்து உத்தியோக நியமனக் கடிதத்தைக், சயாகி கோர வேண்டும். இதனால் அரசாங்கத்தின் பாஸ்போர்ட் வழங்க தேவையான அளவுகோல்கள் பூர்த்தியாகும்.

இது வெறும் சட்ட ஒழுங்குக்கான சம்பிரதாயம். நிச்சயமாக, அரசாங்கத்திற்கு நன்கு தெரியும், அவர் எந்த வேலைக்காகவும் வெளிநாடு செல்லவில்லை என்றும் அதிகாரி கூறினார்.

சயாகி இந்த திட்டத்தை ஏற்றுக்கொண்டிருந்தால், தம்மத்தைப் பரப்பும் நோக்கத்தில் அவருடைய கனவுப் பயணம் சுமூகமாக நிறைவேறியிருக்கும்.

பர்மாவின் கடனை அவரே இந்தியாவுக்கு திருப்பிச் செலுத்தி துன்புறும் உலக மக்களுக்கு தம்மஅமுதம் அளித்ததாக இருந்திருக்கும். ஆனால் இங்கே ஒரு தார்மீகப் பிரச்சினை இருந்தது. அவர் அதில் ஒருபோதும் சமரசம் செய்ய விரும்பவில்லை.

மிக உயர்ந்த மற்றும் சிறந்த இலக்குகள் தவறான வழிமுறைகளால் நிறைவேற்ற முற்பட்டால் அது வெற்றிக்கு வழிவகுக்காது.

வழிமுறைகள், சிறந்த பிரகாசிக்கும் இலக்குகள் போலவே பழமையானதாக பண்பு கெடாத வகையில் தூய்மையானதாக இருக்க வேண்டும். அதுவே வெற்றிக்கு வழிவகுக்கும். இது தூய தம்மம்.

அவர் பரிந்துரையை மிகவும் உறுதியாக நிராகரித்தார். ஒரு வேலைக்கான போலி அழைப்புக் கடிதம் பெறுதல் எளிதாக இருந்திருக்கும்.

ஆனால், தம்மத்தை எப்படி பொய்யான அடித்தளத்தில் கற்பிக்க முடியும்? அவரது இதயத்தில் கூடுகட்டிருந்த விருப்பத்துக்குரிய ஆழமான நீண்டநாள் கனவின் முறிவு - அவருக்கு அதை ஏற்றுக்கொள்ள இயலும்.

ஆனால் ஒரு சின்ன பொய் சொல்ல இயலாது. எப்படி இருந்தாலும் பொய் பொய்தான்.

காரணம் எவ்வளவு உயர்ந்ததாக இருந்தாலும் ஒரு பொய்யை அடிப்படையாகக் கொண்டு சயாகி உ பா கின் கற்பிக்க செல்ல விரும்பவில்லை

---

# அவரது ஆதரவு எப்போதும் உள்ளது

எனது ஆசிரியை சயாகி உ பா கின் பல வருடங்களாக விபாசனாவை கற்றுக் கொடுக்க எனக்கு பயிற்சி அளிக்கிறார் என்பதை நான் உணராமலே பல

ஆண்டுகளாக நான் அவரின் கீழ் பயிற்சி பெற்றேன். அவர்  பர்மிய மொழியை பேசுகையில் இந்திய மாணவர்களுக்கான மொழிபெயர்ப்பாளராக இருந்து அவருக்கு ஒரு உதவியாக நான் இருக்கிறேன் என்ற எண்ணம் மட்டுமே என்னிடம் இருந்தது.

பல வருடங்களுக்குப் பிறகுதான் அவர் எதிர்கால பொறுப்புகளுக்கு என்னை தயார்படுத்தியதை  நான் உணர்ந்தேன்.

அவர் என்னை வடக்கு பர்மாவில் மாண்டலே மற்றும் மயாமியோ நகரங்களில் உள்ள முகாம்களுக்கு அழைத்துச் சென்றார்.  மையங்கள் தம்ம அதிர்வுகளால் நிரம்பியிருக்கும். ஆனால் முகாம்கள் தற்காலிக இடங்கள். அவை தம்மத்தின் ஆற்றல்களால் நிரப்பப்பட்டவை அல்ல.

அவர் என்னை அத்தகைய முகாம்களுக்கு அழைத்துச் சென்றது நான் எதிர்கொள்ள வேண்டிய நிகழ்வுகளுக்கு பயிற்சி அளித்தது போல் தற்பொழுது தோன்றுகிறது.

நான் இப்போது இந்தியாவில் தற்காலிக இடங்களில் தியான முகாம்களை நடத்த வேண்டி உள்ளது. பள்ளிகள், ஓய்வு இல்லங்கள், ஹோட்டல்கள் போன்றவை முற்றிலும் தம்ம அதிர்வுகள் இல்லாத இடங்கள்.

வடக்கு பர்மாவில் மாண்டலேயில் முதல் முகாம் நடைபெற்றது. தியானம் செய்பவர்கள் அனைவரும் ஹிந்தி பேசும் இந்தியர்கள்.

ஒரு நாள் திடீரென்று குருதேவ் மாலையில் ஹிந்தி சொற்பொழிவு செய்யும்படி அறிவுறுத்தினார். நினைத்து பார்க்கையில், இதுவும் கூட அவர் எதிர்கால பொறுப்புகளுக்கு என்னை தயார்படுத்தும் வழிகளில் ஒன்று என்று எனக்குப் புரிகிறது.

பொது சொற்பொழிவுகளை ஆற்றிய அனுபவம், என்னிடம் நிறைய இருந்தது. என்றாலும் எனக்கு ஒரு தம்ம பேச்சு கொடுப்பதில் தயக்கம்.  அதுவும் என் ஆசிரியரின் முன்னிலையில் தம்ம பேச்சு கொடுப்பதில் சங்கடமாக உணர்ந்தேன். இருப்பினும், நான் அவர் கூறியதைப் போலவே செய்தேன்.

மற்றொரு சமயம், ரங்கூன் மையத்தில் ஒரு முகாம் நடத்தப்பட்டது. ஹிந்தி பேசும் மூன்று தியானிகள் மட்டுமே பங்கேற்றனர். எனக்கும் ஆனாபானா கொடுக்க வேண்டிய நேரம் வந்தது. எப்போதும் போல், தம்மத்தின் ஆனாபானா கொடுக்க வேண்டிய மையப் பகுதிக்கு குருஜியுடன் சென்றேன்.

அவர் புத்தருக்கு ஆரம்ப வணக்கம் கூறி முடித்தார்.

பின்னர் அவர் அப்போது நான் சற்றும் எதிர்பாராத விதமாக என்னிடம் மூன்று நகைகள் (திரிரத்னா என்றும் அழைக்கப்படுகிறது- பௌத்தத்தின் மூன்று அத்தியாவசிய துணை கூறுகளாகும்} ஐந்து கட்டளைகள், மேலும் ஆனாபனாவையும் பற்றி  கருத்துகளை தொகுத்து அளிக்க வேண்டும் என்றார்.

இந்த முற்றிலும் எதிர்பாராத அறிவுறுத்தலால் நான் திடுக்கிட்டேன். ஆனால் பதட்டமான என்னைப் பார்த்தது அவர் ‘கொஞ்சமும் பயம் கொள்ள வேண்டாம். நான் இங்கேயே உன்னுடன் இருக்கிறேன்’. என தயக்கத்தைப் போக்கினார். நான் தம்ம போதனை வழிமுறைகளை அவரது முன்னிலையில் முதல் முறையாக இந்த தீவிரமான மற்றும் ஆழமான பொறுப்புகளை செயல்படுத்தினேன். குருதேவ் மிகவும் மகிழ்ச்சியும் திருப்தியும் அடைந்தார்.

நான்காவது நாள் விபாசனா பயிற்சியைக் கொடுக்கும்படி குருதேவர் என்னிடம் கேட்பார் என்று எனக்குள் தோன்றியது. அது போலவே அவர் செய்யும்படி அறிவுறுத்திய பிறகு ஓய்வெடுக்க தன் அறைக்குச் சென்றார்.

அப்போது நான் பதற்றமடைந்தேன்.

அவர் இல்லாத நேரத்தில். நான் எப்படி விபாசனா பயிற்சியைக் கொடுக்க முடியும் என நினைத்தேன்? ஆனால் ஒருவேளை அதுதான் அவர் எனக்கு கற்பிக்க விரும்பினார் போலும். ‘நான் இங்கே இல்லை என்றால் என்ன? என் மெட்டா மற்றும் தம்ம அதிர்வுகள் பாதுகாப்பு உதவி செய்து கொண்டே இருக்கும்’ என உறுதியளித்தார். அவரின் உறுதியளிக்கும் வார்த்தைகள் என்னை பலப்படுத்தி ஊக்கமளித்தது.

இந்த மூன்று தியானிகளுக்கும் முதல் முறையாக நான் விபாசனா பயிற்சியைக் கொடுத்தேன். தலை முதல் கால் வரை தொடங்கிய பயணம்' பாதி கூட முடியவில்லை தியானம் செய்பவர்களில் ஒருவர் கடுமையாக நடுங்கத்தை உணர்ந்தார். அவரது நடுக்கம் அதிகமாகிக் கொண்டிருந்தது.

ஒரு கணம் நான் குழம்பிப் போனேன்.

நான் என்ன செய்ய வேண்டும்? நான் குருஜியை கூப்பிட நினைத்தேன். ஆனால் அது விபாசனா சூழ்நிலையை சீர்குலைக்கும் என்பதால் நான் அவரை அழைக்கவில்லை.

குருதேவின் வார்த்தைகள் நினைவில் வந்தது. அவரது புன்னகை முகத்தின் மெட்டா மற்றும் சுற்றிலும் தம்மம் இருப்பதை நான் உணர்ந்தேன். இவற்றில் தம்ம அதிர்வுகளில் அவர் என்னுடன் இருப்பதால் அவரை அழைக்க தேவையில்லை என்று புரிந்து கொண்டேன்.

என் மனம் அமைதி அடைந்தது. பலப்படுத்தப்பட்டது.

ஒரு சீரான மற்றும் அமைதியான மனத்துடன் அந்த தியானிக்கு மெட்டா கொடுத்தேன். ஒரு சில நிமிடங்களில் அவர் அமைதி அடைந்தார். அவரது நடுக்கம் நின்றது. நான் முதல் முறையாக விபாசனா வழங்குவதில் வெற்றி பெற்றேன். இது குருதேவ்க்கு அபாரமாக மகிழ்ச்சியை அளித்தது.

அன்றிலிருந்து நான் எப்பொழுதெல்லாம் எந்த முகாமிலும் தம்மம் கற்பித்தாலும் வளிமண்டலத்தில் ஊடுருவி உள்ள மெட்டா மூலம் அவரது அருகாமையை நான் உணர்கிறேன். நான் அவரது பிரதிநிதியாய் உள்ளேன் என்பதை அறிவேன். அவரது சபதம் நிறைவேற்றுவதன் மூலம் நான் அவருக்கு சேவை செய்கிறேன். இடம் விட்டு இடம் சென்று, எங்கும் தம்மத்தை வழங்குவதன் முலம் துன்பப்படும் உயிர்களுக்கு சேவை செய்வது மட்டுமே என்னுடைய வேலை. சேவை செம்மனே நிறைவேற்றப்படுதலும் தம்ம பலமும் அவருடையதே.

தம்ம மகன்,

எஸ்.என். கோயங்கா

# சயாகி உ பா கின் (குருதேவரின்) கடிதங்களின் சில பகுதிகள்

"இந்தியாவில், நீங்கள் ஆழமானது மற்றும் இணையற்ற தம்ம சேவையை மேற்கொண்டுள்ளீர்கள். இந்த வேலையைச் செய்வதில் நீங்கள் என் பிரதிநிதியாய் உள்ளீர்கள். பழமையான தம்மத்தை யாருக்கு தேவையோ அவர்களுக்கு எந்த சூழ்நிலைகளும் வழங்கி எதிலும் உங்கள் முயற்சியில் வெற்றி காண வைப்பது என் கடமை. உங்கள் வெற்றியில் தான் என் வெற்றியும் அடங்கியிருக்கிறது..."

10.10.69

----------

"தியானம் செய்பவர்கள் மற்றும் மற்ற உயிரினங்கள் அனைவருக்கும் தியானத்தின் ஒவ்வொரு அமர்வுக்குப் பிறகும் உங்கள் மெட்டாவைப் பொழியுங்கள்

10.12.69

----------

"எதிர்க்கும் ஆற்றல்கள் அனைத்தையும் புத்த பகவான் கடக்கப் போராடியது போலவே நீங்களும் செய்ய வேண்டும்."

----------

"எல்லா உயிரினங்களுக்கும் மற்றும் குறிப்பாக சாதகர்களுக்கு மெட்டாவை வழங்கும் உங்கள் வேலையில் கவனம் செலுத்துங்கள். வெற்றி உங்களுடையதாக இருக்கும் என்ற நம்பிக்கை உறுதி கொள்ளுங்கள்..."

----------

"உலகில் நிகழும் அனைத்து மாற்றங்களில் இருந்து,பராமிகள் நிறைந்தவர்கள் ஒரு நாள் தம்ம சக்கரம் கீழ் இணைவார்கள் என்பது தெளிவாகிறது...."

27.1.70

“அசோகப் பேரரசு மறைந்த பிறகு, பாரதம் தேச மையத்தில் புத்த தம்மம் சிதையத் தொடங்கியது

சுமார் 2000 ஆண்டுகளுக்குப் பிறகு, அங்கு விபாசனாவை மீண்டும் எழுப்பிய முதல் நபர் நீங்கள. இது நேர்மறையான மற்றும் நடைமுறை முடிவுகளை அளித்துள்ளது.

இதைப் பார்க்கும்போது பகவான் புத்தரின் மாபெரும் பொறுப்பை நிறைவேற்றும் பணியை மேற்கொண்டுள்ள உணர்வு தோன்றுகிறது. ….’’

28.8.70

----------

"நீண்ட நேரம் தியானம் செய்ய விரும்புபவர்களுக்கு பொருத்தமான இடம் இருப்பது அவசியம். அது சிறியதாக கூட இருக்கலாம். அது நீங்கள் தம்மா கற்பிக்கும் உங்கள் மையமாக இருக்கட்டும்.

19.9.70

---

# கோயங்காஜியின் தம்பி கௌரிசங்கர்க்கு குருதேவ் எழுதிய கடிதம்

" உங்கள் சகோதரர் சத்ய நாராயண் கோயங்கா பாரதம் (இந்தியா) தூய்மையான தர்மத்தைப் போதிக்கின்றார். சிறப்பாக செயல்படுகிறார். இது என்னை மகிழ்ச்சியில் நிரப்புகிறது. மற்றும் என்னை உற்சாகப்படுத்துகிறது.

தூய தம்மத்திற்கு மிகவும் வளமானதாக இருக்கும் அந்த நிலத்தில் நானும் என் வாழ்நாள் முழுவதையும் அங்கேயே கழிக்க மனதார விரும்புகிறேன் …"

19.6.70

----------------

குறிப்பு: சயாகி யு பாகின் கடைசி மூச்சு விடுவதற்கு இரண்டு நாட்களுக்கு முன்பு தனக்கு நெருக்கமானவர்களிடம் கோயங்காவுடன் வாழ  நான் பர்மாவை விட்டு நிரந்தரமாக செல்வதாக முடிவு செய்துள்ளேன் என்றார்.

மரியாதைக்குரிய. குருதேவ் அதைத்தான் செய்தார் தொடர்கிறார்

அவர் கோயங்காவுடன் வாழ்கிறார். அனைத்து பயிற்சிகளும் அவரது மெட்டா மற்றும் ஆசீர்வதிக்கப்பட்ட பாதுகாப்பின் கீழ் செழித்து வளர்கின்றன மற்றும் இது தொடர்ந்து நடைபெறும். (எஸ்.என்.ஜி.)

- இந்தி 'விபாசனா' பத்ரிகாவில் (செய்திமடல்) அச்சிடப்பட்டது

25-10-1991, தொகுதி 21, எண்-4.

---

# நிப்பானா நோக்கிய புரட்சி [பகுதி]

"நன்கு முயற்சி செய்பவர்கள் தங்கள் பயிற்சியின் மூலம் புத்தரின், தம்மதாது, போதிதாது மற்றும் நிப்பனதாது (தம்மம், போதி அல்லது ஞானம் மற்றும் நிப்பானா ஆகியவற்றின் அதிர்வுகள்) பெறட்டும். மேலும் அவர்கள் அதன் அதிர்வுகளால் மூழ்வதும் சூழப்படட்டும்.

அவர்கள் சீல, சமாதி மற்றும் பன்னா பெறட்டும். அது சம்சார வாழ்கையில் சூழ்ந்துள்ள தீமைகளை அதாவது, ஆசை, அகந்தை மற்றும் தவறான பார்வை (தன்ஹா, மனா மற்றும் மிச்சா-திட்டி) போன்ற இயல்புக்கு அப்பாற்பட்ட கூட்டு பொருட்களின் அசுத்தங்கள் (சௌபாதிசேஸ நிப்பானா) முற்றிலுமாக மற்றும் விரைவாக அழிக்கட்டும். (சங்கார தம்மம்).

அவர்கள், நிப்பானா கதிர்வீச்சுடன் அமைதி பெறட்டும். இந்தப் பிரபஞ்சம் முழுவதும் அவர்கள் அமைதியை வழங்கட்டும்.

– தம்மசக்க நாள், பௌர்ணமி, ஜூலை 1950, ஒரு சொற்பொழிவு

சயாகி யு பாகின் - "விபாசனா கடிகார மணி அடித்தது.' *பக்கம்* 196-197 i

# குஷிநகரில் புத்தரின் போதனைகள் பற்றிய மாநாடு

அரசாங்கத்தின் கலாச்சார மற்றும் சுற்றுலாத் துறை சார்பில் சிறப்பு நிகழ்ச்சி இந்தியாவின் புனித நகரமான குஷிநகரில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அது சாக்யமுனி புத்தரின் மஹாபரிநிப்பானா இடம்.

அனைத்து மதத்தினர் மற்றும் அவர்களின் தலைவர்கள், துறவிகள் பிக்குகள், முனிகள் என பலரும் பங்கேற்றனர்.

மேலும் பல்வேறு பல்கலைக்கழகங்களின் பேராசிரியர்கள், தொழில் வல்லுநர்கள் மற்றும் அமைச்சர்கள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

விபாசனா தியானத்தின் பங்களிப்பைக் கருத்தில் கொண்டு குருஜி கற்பித்த சில விபாசனா தியானிகள் மாநாட்டிற்கு அழைக்கப்பட்டு இருந்தனர்.

மாநாட்டின் முதல் நாளில் 10 நிமிட ஆனாபானா அமர்வு நடத்தப்பட்டது. சுமார் 2000 மேற்பட்ட வணக்கத்திற்குரிய பிக்குகள் மற்றும் 1000 மேற்பட்ட குடும்பத்தலைவர்கள் இந்த அமர்வில் கலந்து கொண்டனர்.

ஆனாபானா அமர்வின் முடிவில் ஒரு அரசாங்கப் பிரதிநிதி - அவர் ஒரு விபாசனா சாதக் - எழுந்து நின்று விபாசனா குறித்து பேசினார்.

அமிர்தத்தை ஒத்த விபாசனாவை ருசிக்க மற்றவர்களை வற்புறுத்தினார். மறுநாள் ஒரு விபாசனா பிரதிநிதி 35 நிமிடங்கள், விபாசனா பற்றி ஹிந்தியில் ஒரு சுருக்கமான வரலாறு அளித்தார்.

அதைத் தொடர்ந்து குருஜியின் 20 நிமிட விபாசனா அறிமுகம் மற்றும் அப்போது அவரது குரலில் 10 நிமிட ஆனாபானா பதிவும் அளிக்கப்பட்டது.

அக்டோபர் மாதத்தின் குளிர் பௌர்ணமி இரவு, ஷரத் பூர்ணிமா என்று அழைக்கப்படும். இந்த சிறப்பு வாய்ந்த நாளைப் "வஸ்ஸா வாஸ் ", அல்லது மழைக்காலம் முடிவடையும் நாள் எனக் கருதுவர்.

இந்த நாள் துறவிகளின் தனிமை காலம் ஒரு முடிவுக்கு வரும் நேரம்.

இந்த நிகழ்வில் கலந்து கொண்ட வணக்கத்திற்குரிய அனைத்து பிக்குகளுக்கும் அரசு சங்-தானா வழங்கியது.

இங்கு சர்வதேச விமான நிலையத்தின் திறப்பு விழாவுக்கு வருகை தந்திருந்த இந்தியப் பிரதமர் இந்த விழாவிலும் பங்கேற்றார்.

அந்நேரத்தில் பக்தர்கள் வணக்கம் செலுத்தும் வகையில் புத்த பகவானுக்கு கட்டப்பட்ட புதிய ராமபார் ஸ்தூபி திறப்பு விழா நடைபெற்றது.

குளோபல் விபாசனா பகோடாவின் ஆர்ட் கேலரியில் இருந்து புத்தரின் வாழ்க்கை குறித்த சில ஓவியங்களும் காட்சிக்கு வைக்கப்பட்டன.

குஷிநகரின் சர்வதேச விமான நிலையத்தில் முதல் விமானம் தரையிறங்கியது. இதில் இலங்கையில் இருந்து வணக்கத்திற்குரிய மூத்த துறவிகள் (மகாதெரஸ்) 11 பேர் உட்பட 126 பிரதிநிதிகள் வந்தார்கள்.

அவர்கள் புத்தரின் புனிதமான உடல் தாது அல்லது நினைவுச்சின்னங்களை அழகாக செதுக்கப்பட்ட தங்க கலசத்தில் வைத்து கொண்டு வந்திருந்தார்கள். அதனை சிறிது நேரம் மஹாபரிநிப்பானா கோயிலில் பக்தர்கள் வழிபாட்டிற்காக வைத்தனர்.

இந்தியப் பிரதமர், இந்தியாவிலிருந்து வந்த வணக்கத்திற்குரிய மூத்த துறவிகளுக்கும் மற்றும் இலங்கையிலிருந்து வந்திருந்த துறவிகளுக்கும் (மகாதெரஸ்) சங்-தானம் வழங்கி நாட்டின் சார்பாக நன்றி தெரிவித்தார்.

---

# பாட்னாவில் உள்ள விபாசனா மையத்தில் இந்திய ஜனாதிபதியின் வருகை

இந்திய ஜனாதிபதி பீகார் நகரம் தலைநகர் பாட்னாவிற்கு தனது குடும்பத்துடன் 3 நாட்கள் விஜயம் செய்தார். அக்டோபர் 22 ஆம் தேதி அவர் பாட்னா, தம்மபாடலிபுத்தா விபாசனா மையத்திற்குச் சென்றார். சிறிது நேரம் தியானத்திற்காக அமர்ந்தார்.






இந்தியாவின் மாண்புமிகு குடியரசுத் தலைவர் திரு. ராம்நாத் கோவிந்த் பாட்னாவில் உள்ள விபாசனா தியான மையத்திற்கு சென்று தம்ம மண்டபத்தில் சிறிது நேரம் தியானம் செய்தார்.

பின்னர், தனது 20 ஆண்டுகால விபாசனா தியானம் அனுபவத்தைப் பகிர்ந்துகொண்டார். சிறப்பாக வேலை செய்யும் திறனை உயர்த்தும் என அவர் வலியுறுத்தினார். தேசத்திற்கு நன்மை பயக்கும் விபாசனாவின் பலனை அரசுத் துறை பயன்படுத்தும் என உறுதி அளித்தார்.

இந்நிகழ்ச்சியில் பீகார் அரசாங்கம் ஒரு ஊதிய விடுப்புகளை குறித்த ஜி.ஆர். வெளியிட்டது. விபாசனா பயிற்சிகளில் பங்கேற்க விரும்பும் அதிகாரிகளுக்கு 15 நாட்களுக்கு ஊதியத்துடன் கூடிய விடுப்புகளுக்கு அனுமதி அளித்தது. இது மற்ற மாநிலங்கள் பின்பற்ற முன்னுதாரணமாக அமைகிறது.

விபாசனா பயிற்சிகளில் அதிக மக்கள் கலந்து கொள்ள நிச்சயமாக ஊதியத்துடன் கூடிய விடுப்புகள் ஊக்குவிக்கும் .

---

# தம்மா தோஹா

நமன கரூங் குரதேவ கோ, கைஸே ஸந்த ஸீஜான்

கிதனே கரூணா சித்த ஸே, தியா தரம கா தான

பாண்டித்தியம் மற்றும் மிகவும் புனிதமான எனது மதிப்பிற்குரிய ஆசிரியருக்கு நான் என் வணக்கத்தை தெரிவிக்கிறேன். கருணை பொங்கி வழியும் மனதுடன், அவர் தம்மம் என்ற பரிசை எனக்கு வழங்கினார்.

ஜய ஜய ஜய குருதேவ ஜீ, நமனும் ஷீஷ நவாய

தர்ம ரதன யேஸா தியா, பாப ஸமீப ந ஆயா

என் ஆசானாகிய உங்களை நான் என் தலை தாழ்ந்து வணங்குகிறேன். மேன்மேலும் எதிலும் என்றும் வெற்றி உங்களுக்கு கிட்டட்டும். அசுத்தங்கள் அருகில் வர முடியாத மிக உயர்ந்த தம்ம நகையை எனக்குக் கொடுத்தீர்கள்.

குருவர! தேரே சரண கீ, தூல லகே ம்ம ஷீஷ

ஸதா தரம மேம் ரத ரஹீங், மிலே யஹீஆஷீஷ

ஓ என் குருவே! உங்கள் கால்களின் தூசி துகள்கள் என் தலையில் படியட்டும். நீங்கள் எனக்கு ஆசி அளியுங்கள். நான் எப்போதும் தம்மாவுடன் மூழ்கி இருக்கும் வரத்தை எனக்கு அளியுங்கள்.

கரஹண கருங் குருதேவஜீ யேஸீ ஷூப ஆஸீஷ

தர்ம போதி ஹீய மேந் தருஞ், சரண நவா ஒம் ஷீஷ

என் இதயத்தில் வைத்திருக்கும் ஞான தம்மம் உங்களிடமிருந்து நான் பெற்றதே. என் குருவே, நன்றியுடன் உமது பாதங்களில் பணிந்து வணங்குகிறேன்.